*International Multidisciplinary Innovative Research Journal*
*An International refereed e-journal*

**ISSN: 2456 - 4613**
**Volume - III (1)**
**November 2018**

## அய்க்கண் சிறுகதைகளில் பெண்ணியம் - ஓர் உளவியல் பார்வை

**பாலசரஸ்வதி.ஆ**
உதவிப் பேராசிரியை, தமிழ்த்துறை
வே.வ. வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்.
தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்**

பெண் என்பவள் சமூக வாழ்வில் ஒரு பிரிக்க முடியாத அங்கம். அவள் இல்லையேல் வீடும், நாடும் இயங்க முடிந்திருக்காது. அவள் இயங்கு சக்தியாகவும், இயக்குவிக்கும் சக்தியாகவும் காணப்படுகிறாள். பெண்கள் பல துறைகளில் சாதனைப் புரிந்தாலும் குடும்பத்திற்காகப் பல தியாகங்கள் செய்கின்றனர். பெண் என்பவள் ஓர் ஆணின் உணர்ச்சிகளுக்கு விருந்தளிப்பவளாகவும் அவர்களின் துயர் துடைப்பவளாகவும் விளங்குகின்றாள். அவ்வகையில் அய்க்கண் சிறுகதைகளில் அமைந்துள்ள பெண்ணியக் கருத்துக்களைப் பதிவு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**வறுமையில் செம்மை**

பண்டைய தமிழ் மகளிர் தம் கணவர் இல்லறம் வறுமையுற்ற போதும், செல்வம் மிக்க தன் தந்தையின் வீட்டை நாடாமல் தம்மிடம் உள்ளது கொண்டு வாழ்க்கை நடத்தி மனச் செம்மையுடன் வாழ்ந்தனர் என்பதை

> “தச்சன் செய்த சிறுமா வையம்
> பொய்கை யூரன் கேண்மை
> செய்திள் புற்றனெஞ் செறிந்தன வளையே”[1]

என்ற குறுந்தொகை பாடல் வரிகள் மூலம் அறியமுடிகின்றது. இதனால் மகளிர் வறுமையிலும் செம்மையாக வாழ்ந்த வாழ்வு புலப்படுகின்றது. பெண்களுக்குத் திருமணம், குடும்பம் என்ற இரு நிலைகள் இருந்தாலும் இச்சமூகமானது குடும்பம் என்ற ஒருவழிப் பாதையைத் தான் விதித்திருக்கிறது. கணவன் சொல்லை மீறாத மரபு வாழ்க்கையையே இனிய வாழ்வாக எண்ணி வாழ்க்கை நடத்தும் “வேர்” சிறுகதையின் தலைவி தெய்வானையையும் பிறர் பொருளைத் துய்த்து வாழும் வாழ்வை எண்ணாது திகழும் “மேன்மக்கள்” சிறுகதையின் தலைவி சிகப்பியையும் வறுமையிலும் செம்மையான வாழ்வை மேற்கொள்ளுகின்றனர் என்று ஆசிரியர் புலப்படுத்துகின்றார். இதனை கண்ணதாசன்,

“இருக்கும் இடமே இனிதென்றெண்ணி

சுவைக்கும் வாழ்வே சுகம் பெறும் வாழ்வு”

என்று பெண்ணின் உணர்வை சுட்டுகின்றார். இங்ஙனம் பெண் மனம் மேம்பாட்டால் இல்லறம் சிறக்கும் என்ற கருத்தினை அய்க்கண் சிறுகதைகளில் மூலம் அறிய முடிகின்றது.

## பெண் மன அறிவு

“பெண் மனம் அறிவு பெறுவதைப்

பொறுத்தே மனித சமுதாயம் அறிவும்

வளர்ச்சியும் பெறுகிறது.”[2]

என்பது ஹெரிடனின் கூற்று ஆகும். பெண்ணின் உரிமை என்பது குடும்பத்தில் செல்வாக்கும், ஆடம்பர வாழ்வும் அல்ல. தனது குடும்பத்தைக் கல்வி தரத்தால் உயர்த்தி அதன் மூலம் முழுமையான உரிமையைப் பெறுவதே உரிமைகள் ஆகும். அவ்வகையில் அய்க்கண் சிறுகதையில் இடம் பெறும் லலிதா என்பவள் எளிய குடும்பத்தில் பிறந்து வரதட்சணை காரணமாகத் தன்னை விடக் கல்வி பொருளாதாரத்தில் குறைந்த ஒருவரை மணந்து தன் அறிவாற்றலால் தன்னையும் தன் குடும்ப நிலையையும் உயர்த்தி வெற்றி கண்டவள். வெறும் ஆடம்பர வாழ்வும், செல்வாக்கும் உண்மையான உரிமைகள் அல்ல என்பதை செல்வ வாழ்வினை வாழ்ந்து கொண்டிருக்கும் லலிதாவின் தோழி சாதனைப் பெண்ணாக சித்தரிக்கப் படுகிறாள். ஏனெனில், கணவன் பெயரை தன் பெயருடன் எழுதுவது வழக்கம். ஆனால், லலிதா கணவனை நன்கு படிக்க வைத்து மருத்துவராக்கி வெற்றி கண்டவள். அக்கணவன் மருத்துவரான பின் தன் பெயரை “லலிதாவின் கணவன்” என்று மாற்றிக் கொண்டு சிறப்பாக வாழத் தொடங்கினான். இங்ஙனம் வெற்றி பெறுவதே உண்மையான உரிமைகள் என்ற மன உணர்வினை வெளிக்காட்டுவதாக “லலிதாவின் கணவன்” என்னும் சிறுகதையில் லலிதாவின் படைப்பு அமைந்துள்ளது.

## விட்டுக் கொடுக்கும் மன உணர்வு

பெண் என்றால் அன்பு, பாசம், பொறுமை என்று பல்வேறு குணங்களைக் கூறுவர். அதிலும் விட்டுக் கொடுக்கும் மனம் என்பது பெண்ணுக்குரிய உன்னதமான மனமாகும்.

“விட்டுக் கொடுப்பவர்கள் யாரும்

கெட்டுப் போவதில்லை”

என்பதற்கிணங்க பெண்ணானவள் குடும்ப அமைப்பில் விளங்குகின்றாள். பல்வேறு குடும்பங்களில் மாமியார், மருமகள் என்ற உறவானது வட துருவம், தென் துருவமாய் உள்ளனர். வயது இடைவெளியும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளாததற்கு காரணமாக அமைகின்றது.

"மாமியார் உடைத்தால் மண்குடம்
மருமகள் உடைத்தால் பொன்குடம்"

என்பது பழமொழி. மாமியார் மருமகள் குடும்பச் சிக்கலுக்குரிய தீர்வை அய்க்கண் "பாஞ்சாலியும் பாமாவும்" என்ற சிறுகதையில் வெளிப்படுத்தியுள்ளார். காமாட்சிக்கு மூன்று மருமகள்கள், ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மகனின் வீட்டில் இருப்பது வழக்கம். முதல் இரு மருமகள்களும் சண்டைப் போட்டுக் கொண்டு இருப்பார்கள். ஆனால் மூன்றாவது மருமகள் லதா மாமியாரைத் தாய்க்கு இணையாக நினைத்து அன்பு செய்பவள். லதாவிடம் கேட்டால், "என் மாமியாரைத் தாயிலும் மேலாகப் போற்றி வணங்கி அன்பு செலுத்திப் பணிவிடை செய்து வர்றேன். இதனாலே என் கணவருக்கு என் மேலே தானாகவே அன்பு அதிகமாகும்" என்று கூறுகிறாள். லதா உறவுகளில் விரிசல் ஏற்படாமல் இருக்க உளவியலின் இன்றியமையாமையைச் சுட்டுகிறார். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, நடப்பவை யாவும் நல்லதே என்று ஏற்றுக் கொள்ளும் மனம் என்பவை இருந்தால் குடும்பம் கோவிலாகும் என்ற கருத்தினை இக்கதையின் மூலம் ஆசிரியர் உணர்த்தியுள்ளார்.

**தாய்மை உணர்வு**

பெண்மைப் பண்புகளில் தாய்மைப் பண்பு மிகவும் போற்றத்தக்கது. பெற்ற பிள்ளை பிழை புரிந்தாலோ இன்னல் படினோ அன்னை அடையுந்துயர் கொஞ்ச நஞ்சமன்று. அத்தகைய நேரங்களில் தான் தாயவளின் தூய உள்ளத்தைக் கண்டு நாம் நெஞ்சு நெகிழ இயலும். தாய்ப்பறவை சிறகுகளில் குஞ்சுகளை வைத்து இரையூட்டும் தன்மை போல அன்னை மைந்தனை அரவணைத்துக் களைப்பைப் போக்கி கவலையை மாய்க்கின்றாள். என்று பாரதி தாயுள்ளத்தின் சிறப்பைப் பற்றி பல்வேறு விதமாகக் குயில் பாட்டில் குறிப்பிடுகிறார்.

"வானம் வெளிறு முன்னே வைகறைப் பொழுதிலே எழுந்து தனித்துச் சென்ற காரணம் என்ன? உணவு நன்முறையில் உட்கொள்ளாமல் இருப்பதன் மர்மமென்ன? என்பன போன்ற கேள்விக் கணைகளைக் காதல் கொண்டோனிடத்து பலரும் கேட்கின்றனர். அவர்களுக்கெல்லாம் தக்க விடைகளை அளிக்கத் தெரியாமல், இப்பொழுது என்னால் எதுவும் உரைக்க இயலாது. நாளை வருவீரேல் நடந்ததெலாஞ் சொல்வேன். இவ்வேளைஎனைத் தனியே விட்டகல்வீர்" என்றுரைக்க நண்பரெலாஞ் சென்றுவிட்டனர். ஆனால் பெற்றதாய் அவளால் விட்டகல முடியுமா? அவனின் நிலை கண்டு நைந்து உருகி நிற்கின்றாள். அதனை,

"……நைந்து நின்றதாயார் தாம்
உண்பதற்குப் பண்டம் உதவி நல்லபால் கொணர்ந்தார்"[3]

என்ற பாரதியார் காட்டுகின்ற வழி நாம் தாயுள்ளத்தை அறியலாம்.

அய்க்கண் தாய்மைப் பண்பினை நன்கு சித்தரித்துள்ளார். கணவனை இழந்த மூக்காயி, இருந்த சிறிதளவு நிலத்தை விற்று மூத்த மகனைப் படிக்கவைக்கிறாள். பணக்காரப்

பெண்ணின் உறவுகிடைத்துத் தாயை மறந்துவிட்டுப் போய் விடுகின்றான். அடுத்த மகனைப் படிக்க வைத்து, வேலைவாங்கிக் கொடுத்தால் தன் துன்பம் குறையும்; இவனாவது தன்னை வைத்துக் காப்பாற்றுவான் என்று நினைக்கிறாள். அதற்காகத் தான் குடியிருந்த வீட்டை விற்றுப் படிக்க வைத்து வேலை வாங்கித் தந்து தன் உறவுக்காரப் பெண்ணைத் திருமணமும் செய்துவைக்கிறாள். 'தண்டச்சோறு' என்று மருமகளிடமிருந்து வந்த ஏச்சையடுத்து மூன்றாவது மகனோடு தான் முதலில் வேலை செய்த பண்ணையார் வீட்டுக்கு வீட்டு வேலை செய்யவந்துவிடுகின்றாள். மூன்றாவது மகனை 'இங்கிலிஷ்' பள்ளிக்கு அனுப்பநினைக்கிறாள். நாலுவீட்டோடு இன்னும் இரண்டு வீடு வேலை செய்து இவனுக்கும் ஏதாவது செய்ய வேண்டாமா? என்று நினைக்கிறாள். தன் மூத்தபிள்ளைகளால் இத்தனை ஏமாற்றத்துக்கு உள்ளான பிறகும் இந்தப் பிள்ளை படித்து வேலை பார்த்துத் தன்னைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கையில் அவனுக்காக உழைத்துத் தேயத் தயாராகிவிட்டாள். அதுதான் பெத்து மனசு பித்து என்பார்கள். தாய் அஃறிணைமாதிரி….. அஃறிணை மிருகங்கள் பறவைகளிடமிருந்து நாம் நன்றி, ஒற்றுமை, சுறுசுறுப்பு இப்படி பல நல்ல பண்புகளை கத்துக்கணும்னு சொன்னீங்களே! அதையெல்லாம் விட நல்ல பண்பை நாம் அஃறிணை கிட்டே இருந்துகத்துக்கணுங்க. உலகத்தில் எந்த ஒரு மிருகமும் பறவையும் தான் பெற்று வளர்த்து ஆளாக்கிய கன்றுகள் குஞ்சுகளிடமிருந்து எந்தப் பிரதியுபகாரத்தையும் எதிர்பார்க்கிறதில்லை. தன் கடைசிக் காலம் வரை தான் உணவு தேடி சாப்பிட்டே தானே சாகின்றன? அந்த மாதிரி தான் தாயும்"என்று மூக்காயி தன் மனஉணர்வினை வெளிப்படுத்துகின்றார்.

**பெண்ணின் அனுசரிப்புத் தன்மை**

இல்லத்தின் தலைவியாகத் திகழும் மகளிர் புகுந்தவீட்டிற்குப் பெருமை சேர்க்க வேண்டும். அதுவே நிரந்தரமான சிறப்பான வாழ்க்கை அமையும் என்பதை, சங்கீதாவின் தங்கையான கவிதா திகழ்கின்றாள். கணவனின் துன்புறுத்தலையும், ஏழ்மை நிலையையும் எடுத்துக் காட்டி, தன்னுடன் வாழும் படி சங்கீதா கவிதாவை அழைக்கிறாள். புகுந்தவீட்டை விட்டுப் பிறந்தவீட்டில் வாழ்வது சிறப்பானதல்ல என்ற மனஉணர்வைக் கொண்டகவிதா,

"அக்கா என் வாழ்நாள் முழுவதும் நீ என்னைக் காப்பாத்திடுவ. ஆனால் உன் வீட்டில் நான் வாழ்நாள் பூராவும் வாழறதுக்கு அர்த்தம் இல்லாமல் போயிடும். நல்லதோ, கெட்டதோ, இன்பமோ, துன்பமோ என் வீட்டின் நாலுசுவர்களுக்குள்ளே இருக்கிறது தான் எனக்கு பெருமை" என்று கூறுவதன் வாயிலாகப் புகுந்த வீடே நிரந்தரமானது என்ற உணர்வு புலப்படுகிறது. பிறபெண்களுடன் தொடர்புடையவனாயினும் அவளைச் சார்ந்தவர்களையும் அனுசரித்து வாழ்வதே பெண்ணுக்குப் பெருமை சேர்ப்பது என்பதைக் கவிதாவின் கூற்று சுட்டிக்காட்டிப் புகுந்த வீட்டினுடைய மனஉணர்வினைப் புலப்படுத்துவதாக அமைகின்றது.

**மணாளனைத் தேர்ந்தெடுக்கும் தன்மை**

திருமணம் என்பது மகளிருக்கு வாழ்வில் முதன்மை இடத்தை அளிப்பதோடு மட்டுமின்றி, வாழ்வில் திருப்புமுனையை உண்டாக்கும். திருமணவயதை அடைந்த மகளிர் தன் மணாளனைத் தேர்ந்தெடுக்கும் மனஉணர்வுகளை அய்க்கண் தன் படைப்பின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார்.

'சுயம்வரம்' எனும் சிறுகதையில் தன் வாழ்க்கைத் துணைவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையைக் கவிதாவுக்கு அவள் தந்தை அளித்திருந்தார். அதனால் கீதாதம் உறவினர்களில் ஒருவரை வாழ்க்கைத் துணைவராகத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு உறவினர்களை நாடிச் சென்றாள். கீதாவின் விருப்பத்தினை நிறைவேற்றும் பொருட்டுத் தன் அலுவலகப் பணிகளைப் புறக்கணித்துக் கீதாவின் செயல்களுக்கு முதன்மை இடத்தை அளிப்பவரைக் காட்டிலும் பொறுப்புமிக்கவரே கடமை உணர்வுக்குக் கட்டுப்பட்டவருமான ஆண்மை(வீரம்) மிகுந்த நடராசனைத் தன் எதிர்காலத் துணைவராகத் தேர்ந்தெடுத்த காரணத்தை விளக்கும் வகையில்,

"ஒரு பெண் சொல்வதையெல்லாம் கேட்டுக் கொண்டு அவள் விருப்பப்படியே நடப்பவர், ஒரு நல்ல காதலராகவும் ரொமாண்டிக் ஹ்ரோவாகவும் இருக்கலாம். ஆனால் ஒரு பொறுப்புள்ள கணவராக, கடமையுணர்வுள்ள நிர்வாகியாக இருக்க முடியாது.

ஒரு பெண் வெளிப்பார்வைக்கு எப்படி நடந்து கொண்டாலும் இயல்பிலே அவள் ஆண்மையால் ஆளப்படுவதைத் தான் விரும்புகிறாள். அப்படி ஆளும் தகுதியுடையவனைத் தான் அவள் துணையாகக் கொள்ள விரும்புகிறாள். இது பெண்மையின் இயல்பான பலஹீனம். ஆனால் இதுதான் உண்மையில் பெண்மைக்கு பலம்" என்று கணவனைத் தேர்ந்தெடுக்கும் போது பெண்கள் எதிர்பார்க்கும் மனஉணர்வினை நன்கு வெளிப்படுத்தியுள்ளார். ஆசிரியர் ஒரு ஆணாக இருந்தாலும் ஒரு பெண் மணாளனைத் தேர்ந்தெடுக்கும் மனஉணர்வினை யதார்த்த வடிவில் வெளிப்படுத்தியுள்ளார்.

**முடிவுரை**

மனிதனை உருவாக்குவதில் பெண்ணானவள் சிறப்பிடம் பெறுகின்றாள். பெரும்பாலும் பெண்கள் துன்பங்களையும், துயரங்களையும் களையக் கூடியவர்களாகச் சித்தரிக்கப் படுகின்றனர். மேலும் அய்க்கண் சிறுகதைகளில் பெண்களின் மனஉணர்வு மேம்பாட்டால் இல்லறம் சிறக்கும் பண்பையும், ஆடம்பரம் இல்லாத உண்மையான மனஉணர்வினையும் வெளிப்படுத்துகின்றார். மேலும் பெண்களின் விட்டுக்கொடுக்கும் தன்மையையும் தாய்மை உணர்வின் சிறப்பினையும் எடுத்துரைக்கின்றார். இல்லத்தில் தலைவியாக விளங்கும் மகளிர் புகுந்த வீட்டிற்குப் பெருமை சேர்க்கும் விதமாக வாழ்வதே சிறப்பான வாழ்க்கை என்பதையும், திருமண வயதை அடைந்த பெண்கள் தன் மணாளனைத் தேர்ந்தெடுக்கும்

மனஉணர்வினையும் தமது சிறுகதைகளில் எதார்த்தமாகவும், இயல்பாகவும் வெளிப்படுத்தும் தன்மையினையும் இவ்வாய்வுக் கட்டுரையின் மூலம் அறிய முடிகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. குறுந்தொகை பா.எ. 61
2. பெண்ணியம், ஹெரிடனின் கூற்று
3. பாரதியார் கவிதைகள்